முருகப்பெருமான் துணை

**மகான் கமலமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.10.2022, வெள்ளிக்கிழமை

1. தானதரும வழிகளை காட்டி
தன்னார்வத் தொண்டு வளர்த்து
ஞானமருளும் அரங்கா வாழ்க
ஞானதேசிகனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தரிவை திங்கள்
குறைவிலா இருபானேழ்திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 27 ம் நாள் 14.10.2022, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு கமலமுனிவர் யானும்
3. யானும் யுகத்தில் அற்புதம் நிகழ
உயர்வான அரங்கன் வழிதனை
ஞானமாகவழிமொழிந்து உரைப்பேன்
நம்பிக்கை தரும் தருமவழிதனை
4. வழிதனை கலியுக மக்கள்
வணங்கி ஏற்றுத் தொடர
அழியாமை எனும் வரத்தை
ஆறுமுக அரங்க ஞானிமூலம்
5. மூலமாக இலகுவாய் அடைந்து
மும்மலக் குற்றம் போக்கி
காலனையே எதிர் கொள்ளும்
கந்தவேலன் அனுகூலம் பெருகி
6. பெருகியே மரணம் வென்று
பிறவிப் பிணியை விரட்டி
தருமவானாக சர்வ பலமும்
தவராஜன் ஆசிபட அடைந்து
7. அடைந்து கலியினில் மாற்றம்
அளிக்கும் ஞானிகள் ஆகவே
தடையற உலகோர் சிறந்து
தரணியில் ஞானவான்கள் தானும்
8. தானுமே நிறைந்த சபையாக
தலைவன் முருகப் பெருமான்
ஞானத் தலைமையை ஏற்ற
ஞான சபையாக நிறுவி
9. நிறுவியே நிலவுலகை காக்கும்
நீதி நிர்வாகம் குன்றாத
பெருமை மிக்க ஞான ஆட்சி
பேருலகம் பாதுகாப்புப் பெறும் வண்ணம்

10. வண்ணமதாய் நிறுவி இனிதே
வருமுலகில் மாற்றம் புரிவர்
எண்ணமெல்லாம் கருணைமிகுந்த
எளிமை பணிவு பயபக்தி நிறைந்த

11. நிறைந்த மக்கள் சமூகம்
நிரம்பிட ஞான ஆட்சியை
ஆறுமுகனார் ஆசிபடப் புரிவர்
அருளிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–